*கவனிக்க.- 17.02.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1747 - 2012 පෙබරවාරි මස 24 වැනි සිකුරාදා - 2012.02.24

*1747 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமுலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 28 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, மாச்சு மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## கல்பவுருக்ஷ சங்வர்தன பதனமவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எரிக் பிரசன்ன வீரவர்தன, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் "கல்பவுருக்ஷ சங்வர்தன பதனமவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) தனி நபர்களுக்கும் இனங்களுக்கும் இடையே ஐக்கியத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமாக சமாதானத்தை ஏற்படுத்தல்;

(2) மனித நடத்தை முறைகளை சீர் அமைப்பதற்கு உதவி அளிப்பதன் மூலம் பலன் தரக்கூடிய சூழலை ஏற்படுத்தவும் சமூக அபிவிருத்தியை அடைதல் ; மற்றும்

(3) விசேடமாக சிறுவர்களால் முகம் கொடுக்கப்படும் சமூக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அபிவிருத்தி திட்டத்தின் மூலம் ஒரு தனி மனிதனை மையப்படுத்தப்பட்ட சமூகத்தைக் கட்டியெழுப்புதல் ;

பிறவும்.

எரிக் பிரசன்ன வீரவர்தன,
பாராளுமன்ற உறுப்பினர்.

2012 ஆம் ஆண்டு பெப்புருவரி 11 ஆந் திகதியன்று.

2-673

---

## இலங்கை, கொழும்பு, மேல் மாகாணத்தின் உயர் நீதிமன்றத்தில் (சிவில் நீதிமன்றில் நடைபெறும்)

வழக்கு இல. : 48/2011/CO
தன்மை : கலைத்தல்
நடைமுறை : கம்பனிச் சட்டம்
பெறுமதி :

சீவலி இன்டஸ்ரீஸ் (தனியார்) லிமிட்டெட், 24/1, நம்பபான றோட், ஹங்வெல்ல விடயத்திலும் ;

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் கம்பனியைக் கலைத்து கணக்குத் தீர்த்தலுக்காக செய்யப்படும் விண்ணப்பம் விடயத்திலும் ;

கோனபீனுவல சிந்த ஏனஸ்ட் விதானகே, இல. 148/E, கீழ் ஹங்வெல்ல , ஹங்வெல்ல
....................முறைப்பாட்டாளர்

மேற்குறிப்பிடப்பட்ட முறைப்பாட்டாளரால் சிவில் நியாயாதிக்க முள்ள கொழும்பில் நடைபெறும் மேல்மாகாண உயர் நீதிமன்றிடம் ஹங்வெல்ல, இல. : 24/1, நம்பபான றோட்டில் அமைந்துள்ள சீவலி இன்டஸ்ரீஸ் (தனியார்) லிமிட்டெட் என்னும் கம்பனியைக் கலைத்து கணக்கைத் தீர்த்து வைக்கும்படி 2011 ஆம் அண்டு ஐப்பசி மாதம் 7 ஆந் திகதி முறைப்பாடு சமர்ப்பித்திருப்பதுடன் அம்முறைப்பாட்டை 2011 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆந் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்க கட்டளையிடப்படும் அம்முறைப்பாடு சம்பந்தமாக கட்டளையிடுவதற்கு சாதகமாகவோ எதிராகவோ விடயங்களை முன்வைக்க எதிர்பார்த்த அக்கம்பனிக்கு கடன் வழங்கியோர், பங்குதாரர்கள் அவர்கள் தாமாகவோ தங்களது சட்டத்தரணிகள் மூலமாகவோ அவ்விசாரணை நடைபெறும் வேளையில் சமுகமாயிருந்ததாகவும் அம்முறைப்பாட்டின் பிரதியைப் பெற்றுக்கொள்ள குறித்த கட்டணத்தைச் செலுத்தி அக்கம்பனிக்கு கடன் வழங்கியோர் அல்லது பங்குதாரர்கள் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது :

றோஸ்மட் லோ சம்பர்ஸ்,
றோஸ்மட் பிளேஸ், கொழும்பு 07,
தொலைபேசி : 2672000/0114379277.

**குறிப்பு** : அம்முறைப்பாட்டை விசாரணை செய்யும் போது சமூகமாக இருக்க எண்ணியுள்ள எவரும் எழுத்து மூல அறிவித்தல் ஒன்றை மேற்குறித்த றோஸ்மட் லோ சம்பர்ஸ் இடம் நேரடியாக கையளித்தோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம். அவ் அறிவித்தலில் அவரது பெயர், விலாசம் குறிப்பிடப்படல் வேண்டும். வர்த்தக நிறுவனமானால் பெயர் விலாசத்தைக் குறிப்பிட்டு அவர் அல்லது அவருடைய சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட்டு 2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 திகதி பி. ப. 6.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். இல்லையேல் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

றோஸ்மட் லோ சம்பர்ஸ்.

2-739

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.